விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்; 32 மார்கழி 29 ஜ. ஆகிர் பிறை 26 இதழ்: 263

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 13-01-1991

## தமிழ் பொலிஸார் ஒய்வுபெறத் தடை?

(யாழ்ப்பாணம்)
வடபகுதி தமிழ்ப் பொலிஸார் ஒய்வு பெறப் போவதற்கான தமது விண்ணப்பங்களை கொழும்பு தலைமையகத்தில் சமர்ப்பித்தபோது இவர்களின் விண்ணப்பங்கள் தற்காலிகமாக நிராகரிக்கப்பட்டது

மேலும் ஒருசில மாதங்கள் கொழும்பு தலைமையகத்தில் வேலை செய்யும்படி அவர்களு

[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளுக்கு எதிராக தாக்குதல் முஸ்தீபு

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கு எதிராக அடுத்த சில வாரங்களில் பெரும் தாக்குதலை நடாத்த அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இத்தகவலை நேற்று பாது

(4-ம் பக்கம் பார்க்க)

# "இந்தியா விட்ட தவறையே ஸ்ரீலங்காவும் விடப்போகிறது"

## விடுதலைப் புலிகள் அறிக்கை

[யாழ்ப்பாணம்]
விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்த காலவரையறையற்ற யுத்தநிறுத்தத்தை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்ததன்மூலம் வரலாற்றில் பெரும் தவறை செய்துள்ளது. இந்திய அரசு செய்த மாபெரும் தவறையே ஸ்ரீலங்காஅரசும் செய்யப்போகிறதென விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழத்தில் சமாதானத்தையும் இயல்புநிலையையும்உருவாக்கும் நல்லெண்ண முயற்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்த கால

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா வரவேண்டாம் படையினர் எச்சரிக்கை

(வவுனியா)
வடபகுதியிலிருந்து அடுத்த சில தினங்கள் வவுனியாவுக்கு எவரும் வரக்கூடாதென இராணுவம் எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கையையும் மீறி வருவோர் சுடப்படுவார்

(4-ம் பக்கம் பார்க்க)

## தனியார் கப்பல்களுக்கு அரசு கடும் எச்சரிக்கை

(கொழும்பு)
இலங்கையில் கடற் பிரதேசத்தில் நிற்கும் சகல கப்பல்களுக்கும் ஏதாவதுஆபத்து ஏற்படும் பட்சத்தில் உடனடியாக கடற்படையினருடன் தொடர்புகொள்ளுமாறு எச்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைச்சர்கள் ஐவர் ராஜினமா?

(புதுடில்லி)
இந்திய மத்திய அமைச்சரவையிலிருந்து 5 அமைச்சர்கள் ராஜிநாமாச் செய்துள்ளனர்; தமது ராஜினமாக் கடி

[4ம் பக்கம் பார்க்க]

## யாழ் பல்கலைக்கழகமாணவன் 'ஜிகாத்' முக்கிய உறுப்பினர்

[மட்டக்களப்பு]
யாழ். பல்கலைக்கழக வர்த்தகபீட முஸ்லிம் மாணவர் ஒருவர் காத்தான்குடியில் 'ஜிகாத்' அமைப்பின் முக்கிய உறுப்பினராகசெயல்பட்டுவருகிறார்.

காத்தான்குடியில்தற்போது இவர் இராணுவத்துடன் 'ஏ. கே. 47' துப்பாக்கியுடன் இப்பகுதியில் சுற்றித்திரிவதாகவும் தமிழர்க்கு எதிரான செயற்பாடுகளில் இவர்தீவிரமாக ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரைப்போன்று வேறும் சில மாணவர்களும் ஜிகாத்தில் இணைந்து மிகதீவிரமாக செயற்படுவதாகவும் தெரிய வருகிறது. (சி)

## 'பனடோல்' அளவு பொருள் வெடித்து படுகாயம்

(நல்லூர்)
'பனடோல்' அளவிலான பொருள் ஒன்று வெடித்து மண்டதீவில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீடு கழுவிக்கொண்டிருந்த மண்டைதீவைச்சேர்ந்த செ. கிருஷ்ணராசா (20 வயது) என்பவர் 'பனடோல்' அளவான பொருள் ஒன்றை வீட்டில் கண்டெடுத்தபோது, அது வெடித்து பலத்த காயங்களுடன் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், (152)

## ஆனையிறவு முகாமிலிருந்து ஷெல், கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு படைமுகாமிலிருந்து நேற்றுமுன்தினமிரவு கடும் ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு 8-30 முதல் 10மணிவரை பரந்தன், முரசுமோட்டையை நோக்கி இத்தாக்குதல்தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை படைமுகாமிலிருந்து பல பகுதிகளையும் நோக்கி இருமணி நேரம் கலிபர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. (சி)

## வவுனியா, கிளிநொச்சியில் பலத்த விமான தாக்குதல் பலர்காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)
வவுனியா மாவட்டத்திலும் கிளிநோச்சி, உருத்திரபுரம், பகுதியிலும் நேற்று பலமணி நேரம் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சில் ஒருவர் கொல்லப்பட்டும் 10 க்கும் மேற்பட்டோர் படுகாயமுமடைந்தனர் பலகட்டிடங்களும், வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

நேற்று அதிகாலை 4 மணி முதல் பஸ் டிப்போ சந்தியிலும், சந்தை பகுதியிலும் இருபொம்மர்கள் 5 ற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசித் தாக்கின.

இதனால் அவ்வழியே சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு மண்ணெண்ணெய் வியாபாரிகளின்இவவாலைப குமரிர் (வயது 17), சேந்தன்குளம் எஸ், பிரான்சிஸ் (வயது 25) உட்பட ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பலமானநிலையில் புலிகள் அமைச்சர் ரஞ்சன் கருத்து

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் மிகப் பலம்வாய்ந்த நிலையிலிருப்பதாக அமைச்சர் திரு: ரஞ்சன் விஜயரத்னதெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## 12,000 ஆஸ்திரிய மக்கள் இலங்கைக்கு கண்டன மகஜர்

[வேர்கல்]
1985 ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்திலிருந்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இரு தமிழ் விவசாயிகள் பற்றி உடனடியாக தகவல் தருமாறு 'சர்வதேச மன்னிப்பு சபை' யின் ஆஸ்திரிய நாட்டு கிளை 12,000 பேர் கையெழுத்திட்ட மகஜர்ஒன்றை இலங்கை அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது.

85-ம் ஆண்டு டிசம்பர் மாதம் அம்பாறை மாவட்டத்தில் கொண்டவெட்டுவான்

(4-ம் பக்கம் பார்க்க)

## பெப்ரவரி மாதத்திற்குள் மின்சாரம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)
மாங்குளத்தில்சேதமடைந்த மின்கோபுரங்களைத் திருத்துவதற்கான பணியை மின்சார சபை நாளைமறுதினம் ஆரம்பிக்கவுள்ளது.

இதற்குத் தேவையான உபகரணங்கள் கொழும்பிலிருந்து தருவிக்க ஏற்பாடாகியுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கல்வி

O/L எப்ரல், டிசெம்பர் பரீட்சைகளில் விசேட சித்தி அதிவிசேடசித்தி பெறுவதற்கு பரீட்சை தாள்கள் சென்ற 15 வருடங்களாகத் திருத்திய பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும் 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (சி-4256)

### தவறிவிட்டது

வெள்ளைடன் சதாசிவம் ஆகியனதுதேசியஅடையாள அட்டை இல. 582801967X நாவற்குழிக்கும் பூநகரிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தோர் கீழ்க் காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் உண்டு. V. சதாசிவம். வரப்பிரசாசம் டெக்ஸ், No. 31B, நவீன சந்தை, சுன்னாகம்.

(சி-4257)

## சுயவேலைவாய்ப்பு கலந்துரையாடல்

(நல்லூர்)

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவில் தொழில்நுட்ப வகுப்பில் பயிற்சிபெற்று வெளியேறியோருக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு இம் மாதம் 16-ம் திகதி புதன் கிழமை மாலை 2 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெற இருக்கிறது. (152

## மகளிர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் தட்டாதெரு கலா ஜோதி இளைஞர் ஒன்றியம், மகளிர் அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்து நடத்தும் மகளிர்க்கான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை கலாஜோதி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலால உட்படப் பலர் உரையாற்றுவர். (ரி)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

### யாழ் பிரிவு

புதிதாக அமைக்கப்பட்ட எமது பயிற்சி, சுதேசிய பொருள் விற்பனை நிலையங்கள்

திங்கட்கிழமை (14-01-1991) காலை 11-30

மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்

எமது சங்க அங்கத்தவர்கள், தொண்டர்கள் அனைவரையும் டங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்.

(எ-985)

---

# பற்றீஷியன்

## தொழிற் கல்வி நிலையம்

### அகில உலக கெயர் மரவேலை, கட்டுவேலை பயிற்சிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் (Care International) இணைந்து எமமால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி தகைமை:**

15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்,
8-ம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட தராதரமும்,

**பயிற்சிக் காலம்:**

2½ மாதம் ஸ்தாபப் பயிற்சி
10 மாதம் பயிலுனர் வேலையாளர் பயிற்சி.

**கொடுப்பனவு:-**

ஸ்தாபன பயிற்சியின் போது மாதம் ரூபா 600 உம 10 மாத டயிலுனர் பயிற்சியின் போது வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும், அத்துடன் இலவச உபகரண பொறியும் வழங்கப்படும்.

**சான்றிதழ்கள்:-**

பயிற்சி நிலைய பயிற்சி சான்றிதழ் தொழிற் பரீட்சை அடிப்படையில் தேசிய [அரசாங்க] தொழில் சான்றிதழ் சர்வதேச ரீதியிலான கெயர் ஸ்தாபன சான்றிதழ்.

**இதர உதவிகள்:-**

பயிற்சி முடிந்தவர்களுக்கு சொந்தத்தில் முயற்சிகளை தொடங்க கெயர் ஸ்தாபனத்தின் மூலம் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும்.

**விண்ணப்பங்கள்:-**

பதிவாளர் பற்றீஸியன் தொழில் நிறுவனம், 59, சென் பற்றிகஸ் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு 05-02-91 க்குப் பிந்தாமல் நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பதிவாளர்,

**பற்றீஷியன் தொழில் நிறுவனம்**

(ஏ-984)

---

## உபகாரப் பணம்

(பளை)

பளைப் பகுதியில் கடந்த 6 மாதகாலமாக வழங்கப்படாதிருந்த அரச உபகாரப் பணம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதியைக் கிளிநொச்சி அரசாங்க அதிபர் க மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து பெற்று வந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

## இராசி பலன்

**13-01-1991**

ஞாயிற்றுக்கிழமை

கேட்டை பி,ப. 3-26வரை. திரயோதசி பி.இ. 215வரை மரணயோகம். இராகு காலம் காலை 5 03 முதல் 6-33 வரை சுபநேரம் காலை 9-33 முதல் 11-03 வரை; பிரதோஸ விரதம்.

மேடம்- மனக் குழப்பம், தொழில் குறைவு, குடும்பத்தில் சங்கடம், பொதுப்பணி, பயணங்களால் செலவு.

இடபம்- தொழில்போராட்டம், குடும்பபிரிவு, நரம்புப் பலவீனம், மக்களால் துன்பம், அதிகயோசனை

மிதுனம்- வேண்டியவை கிட்டும், குடும்பத்தில் உல்லாசம், பணியாள் சகாயம், பலிதம் இனசன உறவு.

கடகம்- புதிய போராட்டம், குடும்பமகிழ்ச்சி, இனசன வருகை. தொழில்லாபம், பயணங்களால் நலமை.

சிங்கம்- எதிரிகள் தொல்லை, வீண்குரோதம், அந்நிய வாசம், அதிகாரிகள் சினம், படபடப்பு.

கன்னி- ஆலய தரிசனம், குடும்ப அமைதி, பணப்புளக்கம், தொழில் நன்மை, அகால போஜனம், யோசனை.

துலாம்- ஆடம்பரச்செலவு, சகோதர பகை, தொழில் குறைவு, குடும்பத்தில் மனக்குறை அவமதிப்பு.

விருச்சிகம்- அதிகாரிகள் கெடுபிடி. பெண்களால் துன்பம், மனக்குமுறல், வேண்டாத பிரச்சனை, கடன் சுமை.

தனுசு- வீட்டில் மகிழ்ச்சி, சகோதரர் உதவி. தொழில் லாபம். புதிய முதலீடு, பதவி உயர்வு.

மகரம்- ஆடம்பரச் செலவு. அந்நியர் பயம், குடும்பப்பிரிவு, சளித் தொல்லை, தொழில் நஷ்டம், செலவு.

கும்பம்- புதிய சிந்தனை, நண்பருதவி, தொழில்மாற்றம், பயணம், புத்திரர்

மீனம்- தாய்வழி உதவி, குடும்ப அவமானம் தொழில் போட்டி, பழைய உறவு, தெய்வீகசெலவு.

'ஜோஸ்யர்'

---

# அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ்

இலங்கையில் அதிகம் விற்பனையாகும்

**பாலர் பதிப்பு 32 பக்கங்களில்**

சீர்திருத்த எழுத்துக்களுடன் அகர வரிசைக்கான விளக்கப்படங்கள், படம்பார்த்து பெயர், கதை சொல்லல், விலங்குகள், பறவைகள், நிறங்கள், உடலின் உறுப்புக்கள்: செயல்கள் நல்லொழுக்க நாளாந்த கடமைகள், பாடல்கள்யாவும் உள்ளன;

நாடெங்கும் கிடைக்கும்;

விலை ரூபா 12 - 00

ஆட்பேப்பரில் ரூபா 15-00

பதிப்பாளர்:-

**அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம்**

கைதடி.

(ஏ-983)

---

### திருமலை

# தபால்கந்தோர் வேலைகள் பாதிப்பு

(திருமலை)

திருகோணமலை பிரதம தபாற்கந்தோரில் தபால் அலுவலர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. இதன்காரணமாக தபால் கந்தோர் அலுவல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் 29 அலுவலர்கள் இங்கே கடமையாற்றினார்கள். 22 ஊழியர்களில் சிலர் இளைப்பாறியுள்ளார்கள். சிலர் இடமாற்றப்பட்டுள்ளார்கள்.

இடமாற்றப்பட்டவர்களின் இடத்திற்கு அலுவலர்கள் இன்னும் அனுப்பப்படவில்லை.

(153)

### விஞ்ஞான

# பொதுப்பட்டதாரி பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பொதுப் பட்டதாரி பரீட்சை 1989 முடிவுகள் வெளியாகியுள்ளது.

மேற்படி பரீட்சையில் இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவில்) சித்தியடைந்தவர் எஸ். குகானந்தா இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவில்) சித்தியடைந்தவர்கள் விபரம் பின்வருமாறு:

செல்விகள் ஆர். கௌரிதேவி, ஆர், கீதா, எஸ். சுபாங்கி, கே மைதிலி.

இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விபரம் பின்வருமாறு:

செல்விகள்: என். அனுராதா, ஏ. ஏ சி கிறிஸ்தோபர், பி. கீதா, ஜி. சண்முகம், பி. இந்திரா. எஸ் மாலினி, என். ஆறுமுகம், என். புஸ்பராணி, எம். ரஜனி எஸ். ரஞ்சிதாதேவி, ஏ வி. சாந்தினி, ரி. சிவநந்தினி. ஜி தர்ஷிகா, ரி. தனுஷினி, கே. திருமகள், ஜே வாசுகி, ரி. கலாராணி, திரு எவ். ஐ. ஜேசுதாசன், எஸ். சிவபாலா, ரி. சிவரஞ்சன், ஓ. விஜயதாசன். வை. முரளிதரன், ரி. சிவயோகலிங்கம், பி. குகநாதன், கே. எல் முகமட் பயூறான், ரி தர்மானந்தம், என யுவராஜ், எஸ். சிவநேசராசன். வி, விக்கினேஸ்வரன், ரி. ஏ ஜே இன்பராஜா, கே. குகராஜா, எஸ். சண்முகராஜா, ஏ. மனோகரன், எஸ். இலட்சுமணன், வி. சிறிலங்கன், எம். ஜெயகணேஷ், எஸ். ரவீந்திரன், எஸ். ராஜசூரியர், எஸ். சிறிபாலன், ரி. விஜயகுமார், எஸ் ஜெயகுமார். ஏ.கோடீஸ்வரன், கே. நக்கீரன், எஸ். எஸ். பரமேஸ்வரன், ஈ. போல் நரேந்திரன், எஸ். சிவகுமார். செல்விகள் ரி. நாகேஸ்வரி, எஸ். அருந்நிதி, எஸ். நிகிலா, எம். மகாபுஸ்பம், வி. சுபத்திராதேவி, எஸ் ரஞ்சினிதேவி, கே. பங்கஜசெல்வி, வி, ரோஹினி, வி. வித்யாகுமாரி, ஆர் தயாளினி. கே. சிவநங்கை, ரி. சிறீஷௌரி, எஸ். சந்திரிகா, பி. தங்கராணி.கே. கீதா, பி.தவராணி, எஸ். ஞானலக்ஷ்மி, ஜே. வசந்தரூபி, திருமதி எஸ். ராஜஜோதினி, ஜே. கிருஷ்ணமோகன், எம். சாந்தகுமார், கே. சிறிமோகன், எம். ஆனந்தநடராஜா, எஸ். மதியழகன், ஏ. நித்தியானந்தன், என், சுதந்திரேஸ்வரன், பி. ஏ. ஏ. பெஞ்சலோ, கே. கிருபாலமூர்த்தி, செல்விகள் எஸ். கோகிலா, எஸ். சிந்தாதேவி, ஜி. சியாமளா, ஆர். சுகுணு, ஏ, பி. ராஜசூரியர், திரு. ரி. நந்தகுமார், என். சபாநாயகம், ஏ. சிவாதுஷ்யந்தன், எஸ். உருத்திராகுமார், ஆர். வரதராஜன், எம். ஞானசேகரன், எச். சி. தங்கராஜா, ஏ. என். பிளாசிடாஸ், எஸ். பரந்தாமன், ஆர். குகதாசன். கே. பஞ்சலிங்கம். (153)

## யாருடையது?

வெள்ளை நிற மணிப்பேஸ் ஒன்று ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்

## சிகரட் கொள்ளை

(மானிப்பாய்)

நள்ளிரவு ஓடுபிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பற்றறிகள் சிகரட் ஏன்பனவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் ஆனைக்கோட்டையில் இடம்பெற்றுள்ளது.

### கேணிக்குள் மூழ்கி

## குழந்தை மரணம்

(தென்மராட்சி)

ஒன்றரை வயது பெண் குழந்தை வீட்டின் அருகில் உள்ள கேணியில் வீழ்ந்து நீரில் மூழ்கி மரணமானது.

தாவளை இயற்றாலையைச் சேர்ந்த தே. செல்வி [illegible] என்ற குழந்தையே மரணமானது,

தாயார் கிணற்றில் குடிநீர் எடுக்கச் சென்றபோது குழந்தை கேணிக்குள் மூழ்கி மரணமானது.

## திருவாசகம் முற்றோதல்

(காங்கேசன்துறை)

கீரிமலைச் சிவன்கோவிலில் இன்று 13ந் திகதி 'திருவாசகம் முற்றோதல்' நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. (87)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழகத்தின் 15வது வருடாந்த பொதுக்கூட்டம் கழகத் தலைவர் திரு. ஆ செல்லையா தலைமையில் யாழ் வீதி பாலர் பாடசாலை மண்டபத்தில் நாளை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும்.

## அடுப்பிலிருந்து நெருப்புக்குள்

'தமிழர் பிரச்சனே' என்ற 'தீ'யை மேலும் எரியூட்டி வளர்க்க அரசியல் சதிச் சாணக்கியமா? அல்லது இராணுவ கொடூரமா? என்ற இரண்டுக்கும் இடையே சந்தேக சபல மதில் மேல் பூனேயாகி தடுமாறி தவித்த 'இரணிய வாத அரசு'' இறுதியில் அடுப்பிலிருந்து நெருப்புக்குள் விழுந்து விட்டது!

இரண்டும் கெட்டான் நிலேயில் இருப்பவர்களுக்கு இக்கதி நேர்வது இயல்பு!

விடுதலேப்புலிகளுக்கு எதிராக அரசு மீண்டும் தாக்குதல்களே ஆரம்பித்துள்ள போதிலும், தமது காலவரையறற யுத்த நிறுத்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப் போவதாக விடுதலேப் புலிகள் நிதானமாக அறிவித்துள்ளது வரவேற்கப் பட வேண்டியது.

போராளிகள் அஹிம்சைவாதிகளோ, ஆயுத மேந்திகளோ, மன உறுதியைப் பொறுத்தவரை ஒருதாய் பெற்ற இரு வேறு குழந்தைகளே!

இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் மிருகத்தனமான முறையல தடியடியல தாக்கி துப்பாக்கிகளால் சுட்ட போதிலும், தமது இலட்சியத்தைக் கைவிடாத காந்திய அஹிம்சைவாதிகளின் மன உறுதிக்கு முன் பிரிட்டிஷ் இராணுவத்தினர் பலம் பேதலித்துசரணடையவேண்டிய ஏற்பட்டது!

எல்லோரும் வாழ நல்ல வழிகாண வேண்டும் என்ற நோக்கத்துடன், முறையாகக் கடைப்பிடித்து வரும் ஒருதலேப்பட்ச யுத்த நிறுத்தத்தைக் குழப்பி, குலேத்து, இராணுவ எதிர்த்தாக்குதல்நடாத்தினுலும், தற்பாதுகாப்புக்கு மட்டும், தாம் ஏந்திய துப்பாக்கிகளிலிருந்து 'ரவைகள்' உந்திப்பாய இடமளிக்கப்படும் என்று உறுதிபூண்டிருப்பது பாராட்டத்தக்கது.

பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில்ஏறிய கதையின் கதா நாயகஞகியுள்ள இலங்கையரசு.

''நான், ஆடாத அசுர ஆட்டம் எல்லாம் ஓயாமல் ஆடிக்காட்டுவேன் நீ-மட்டும் ஆடாமல் அசையாமல் கைகட்டி வாய்பொத்தி மரமாகி நிற்கவேண்டும்!'' என்று எதிர்பார்த்து நீண்டதொரு அறிக்கையும் வெளியிட்டுள்ளது.

விடுதலேப் புலிகளின் தலேவர் திரு. பிரபாகரனே சந்தித்துப் பேசுவது உட்பட 15க்கு மேற்பட்ட நிறுத்த -கடைப் பிடிக்க- வேண்டும்! வேண்டும்!! என்ற கடும் நிபந்தனேகள் வேறு அரசு விதித்துள்ளது

காலவரையறையற்ற ஒருதலேப்பட்ச, 'யுத்த நிறுத்தம்' மூலம் ''ஆக்க பூர்வ அரசியல் முடிவு எடுத்து உறுதியாக முன்னேறியுள்ள விடுதலே புலிகளின் தொடர் யுத்தநிறுத்த'' மறு முடிவானது நிதான புத்தியோ, மன உறுதியோ அற்ற இலங்கை அர அரசுக்கு நித்த தலேயிடி கொடுப்பது உறுதி!

— மயூரன்

# 100 கடன் பத்திரகாரருக்கு நாளை மீட்புநிதி மீளளிப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக்கு பங்களித்த கடன் பத்திரதாரர்களின் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு கடன் பத்திரதாரர்களுக்கான கடன் மீளளிப்பு 14-01 1991 அன்று நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

தமிழீழ விடுதலேப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர் ஒவ்வொருவரும் தத்தமது கடன் பத்திரத்தையும் அடையாள ஆவணம் ஏதாவதொன்றையும் கடன்மீளளிப்பு தொடர்பாக எம்மால் அனுப்பப்பட்ட கடிதத்தையும் அன்றைய தினம் எம்மிடம் சமர்ப்பித்து அவர்களுக்குரிய தங்க நாணயத்தை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர் விபரம் வருமாறு;

### கோப்பாய் உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல. | க.ப.இல. |
|---|---|
| யா/கோ/32 | 32 |
| யா/கோ/44 | 44 |
| யா/கோ/71 | 71 |
| யா/கோ/174 | 1174 |
| யா/கோ/196 | 1196 |
| யா/கோ/315 | 1315 |
| யா/கோ/273 | 1273 |
| யா/கோ/1202 | 8204 |
| யா/கோ/1262 | 8263 |
| யா/கோ/1530 | 8537 |
| யா/கோ/1753 | 8754 |
| யா/கோ/2256 | 9257 |
| யா/கோ/2439 | 9440 |
| யா/கோ/3158 | 14159 |
| யா/கோ/4338 | 15339 |
| யா/கோ/4923 | 15924 |
| யா/கோ/5172 | 16173 |
| யா/கோ/553 | 16532 |
| யா/கோ/5598 | 16599 |
| யா/கோ/6281 | 18282 |

### நல்லூர் உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல. | க.ப. இல. |
|---|---|
| யா/ந/07 | 3007 |
| யா/ந/14 | 3014 |
| யா/ந/73 | 3073 |
| யா/ந/191 | 3191 |
| யா/ந/369 | 3369 |
| யா/ந/465 | 3465 |
| யா/ந/511 | 3511 |
| யா/ந/515 | 3515 |
| யா/ந/552 | 3552 |
| யா/ந/655 | 3655 |
| யா/ந/823 | 3823 |
| யா/ந/845 | 3845 |
| யா/ந/873 | 3873 |
| யா/ந/895 | 3895 |
| யா/ந/1047 | 10047 |
| யா/ந/1340 | 10340 |
| யா/ந/2115 | 11115 |
| யா/ந/3015 | 12015 |
| யா/ந/4211 | 13211 |
| யா/ந/1548 | 13548 |
| யா/ந/4620 | 13620 |
| யா/ந/5156 | 19656 |

### உடுவில் உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல. | க.ப. இல. |
|---|---|
| யா/உ/362 | 2363 |
| யா/உ/639 | 2610 |
| யா/உ/650 | 2651 |
| யா/உ/1323 | 4324 |
| யா/உ/1573 | 4574 |
| யா/உ/2089 | 5090 |
| யா/உ/2974 | 5975 |
| யா/உ/3023 | 26024 |
| யா/உ/3125 | 26126 |
| யா/உ/3171 | 26172 |

### பருத்தித்துறை உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல. | க.ப. இல. |
|---|---|
| யா/பரு/20 | 20012 |
| யா/பரு/29 | 20021 |
| யா/பரு/31 | 20023 |
| யா/பரு/51 | 20043 |
| யா/பரு/135 | 20135 |
| யா/பரு/61 | 20610 |
| யா/பரு/628 | 20628 |
| யா/பரு/825 | 20825 |
| யா/பரு/827 | 20827 |
| யா/பரு/844 | 20844 |
| யா/பரு/905 | 20905 |
| யா/பரு/1170 | 21170 |
| யா/பரு/1386 | 21386 |
| யா/பரு/3368 | 30368 |
| யா/பரு/3529 | 30529 |
| யா/பரு/3585 | 30585 |

### சங்கானே உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல. | க.ப. இல. |
|---|---|
| யா/ச/12 | 27012 |
| யா/ச/26 | 27026 |
| யா/ச/74 | 27074 |
| யா/ச/97 | 27 97 |
| யா/ச/108 | 27108 |
| யா/ச/476 | 27476 |
| யா/ச/731 | 27731 |
| யா/ச/791 | 27791 |
| யா/ச/1395 | 28395 |
| யா/ச/2385 | 29385 |
| யா/ச/2541 | 29541 |

### மானிப்பாய் உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல. | க.ப. இல. |
|---|---|
| யா/மா/58 | 158 |
| யா/மா/102 | 202 |
| யா/மா/207 | 307 |
| யா/மா/257 | 357 |
| யா/மா/269 | 369 |
| யா/மா/354 | 454 |
| யா/மா/416 | 516 |
| யா/மா/554 | 654 |
| யா/மா/750 | 850 |
| யா/மா/751 | 851 |
| யா/மா/756 | 856 |
| யா/மா/970 | 1070 |
| யா/மா/1582 | 6582 |
| யா/மா/1720 | 6720 |
| யா/மா/3238 | 18738 |

### வெளியகழ்வு

| தொடர்பு இல. | க.ப. இல. |
|---|---|
| யா/வெ/20 | 17020 |
| யா/வெ/185 | 17185 |
| யா/வெ/504 | 17504 |
| யா/வெ/645 | 17645 |
| யா/வெ/662 | 17662 |
| யா/வெ/727 | 17727 |
| யா/வெ/771 | 17771 |

(வி)

## தைப்பொங்கல் கதம்ப நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலேக்கழகத் தமிழ்மன்றத்தின் ஆதரவில் தைப்பொங்கல் தினத்தன்று பிற்பகல் 2-00 மணிக்கு கைலாசபதி கலேயரங்கில் தைப்பொங்கல்கதம்பநிகழ்ச்சி நடைபெறும்.

## பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலேக்கழக விஞ்ஞான பொது பட்டதாரி பரீட்சை (1989) முடிவுகள் வெளியாகியுள்ளது.

## என்ன சங்கதி?

சாவகச்சேரியில் ஒரு வீட்டுக்குச் சென்றிருந்தேன். முன் பக்கத்தில் ஏழெட்டுப் பூச்சாடிகள். ஆனுல் அவற்றில் பூமரங்கள் இல்லே. மிளகாய்க் கன்று வளர்ந்திருந்தது. உள்ளே மற்றெரு சாடியில் மிளகாய்க் கன்று ஒன்று வளர்ந்து பூர்த்துக் காய்த்து. அழகாக இருந்தது;

யாழ் நகரிலும் ஒரு வீட்டில் பூச்சாடிகளில் வெண்டிகள் ஆள் அளவு வளர்ந்திருந்தன

இப்போதெல்லாம் கிராமங்களில் மட்டுமல்ல, நகரில்கூட மக்கள் வீட்டுத் தோட்டத்தில் ஆர்வம் காட்டி வருகிருர்கள். உப உணவுகளே உற்பத்தி செய்கிருர்கள்.

தற்போது மிளகாயின் விலே நூறையும் கடந்துவிட்டது; மரக்கறி விலேயும் இரட்டிப்பாகிவிட்டது.

இந்த நிலேயில் ஒவ்வொரு வீட்டிலும் மிளகாய், கத்தரி, வெண்டிப் பயிர்கள் பயிரிடுவது அவசியம்;

கடைத்தெருவுக்குப் போகாமல் தேவையானபோது பிடுங்கிப் பாவித்துக்கொள்ளலாம்;

சில ஸ்தாபனங்கள் இலவசமாக விதைகளே வழங்கி வருகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் சிறு பகுதி நிலமாவது இருக்கும்; வீட்டில்தண்ணீர் உண்டு. காலேயிலும், மாலேயிலும் குறைந்தது அரை மணி நேரம் செலவிட்டால் தேவையான காய்கறிகளேப் பெறமுடியும்.

தரிசாக உள்ள நிலங்களேயும் பயன்படுத்தவேண்டும்.

'ஊரோடி'

## மன்னர் மாவட்டத்திற்கு 300 மெற்றிக் தொன் உரம்

(பூநகரி)

மன்னர் மாவட்டத்திற்கு கொழும்பிலிருந்து 300 மெற்றிக் தொன் உரப்பசளே கப்பல் மூலம் வந்தடைந்துள்ளது.

இவை மன்னர் மாவட்ட விவசாயிகளுக்கு கமநல சேவைத் திணைக்களம் மூலம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது;

இதற்கேற்ற ஒழுங்குகளே அரசாங்க உத்தியோகத்தர்கள் முன்னின்று செய்துவருகின்ருர்கள். இதனுல் மன்னர் மாவட்ட விவசாயிகளின் உரத்தேவை ஓரளவு நிவர்த்தியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (23)

## குடிநீர் அசுத்தமடைவதால் தொற்றுநோய் பரவுகிறது

[திருமலே]

குடிநீர் அசுத்தமடைவதன் விளேவாக திருகோணமலேயில் நெருப்புக்காய்ச்சல், குடல் நோய் போன்றவை பரவிவருகிறது;

மக்கள் சுத்தமான குடிநீரை பருகுவதுடன் சுகாதாரமான நடவடிக்கைகளேயும் கைக்கொள்ளவேண்டுமென திருமலே மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஜி. ஞானகுணுளன் தெரிவித்துள்ளார்,

இச்செய்தி ஒலிபெருக்கி மூலம் திருமலே நகரெங்கும் அறிவிக்கப்பட்டது. [153]

### தமிழக நிலேமையால்

## இந்திய பாராளுமன்றில் பெரும் அமளிதுமளி

(புதுடில்லி)

தமிழ்நாடு தொடர்பாக பிரதம மந்திரி சந்திரசேகர் வெளியிட்ட அறிக்கைகள்குறித்து நேற்றுமுன் தினம் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் பலத்த அமளிதுமளி நிகழ்ந்தது.

இதனேயடுத்து ராஜ்யசபா கால்மணி நேரத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது;

ராஜ்ய சபாவில், தி மு. க. உறுப்பினர்கள் எழுந்து பிரதமர் சபைக்கு வந்து நிலேமையைத்தெளிவுபடுத்தவேண்டும் என்று கோரினுர்கள்.

தமிழகத்தில் தி. மு. க. அரசுக்கு எதிராக பிரதமர் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று தி. மு. க உறுப்பினர் திரு. முரசொலிமாறன் கூறினுர்.

தமிழக அரசைக்கலேத்துவிடுமாறு இந்திராகாங்கிரஸ் கட்சியும், அ தி.மு.க வும் சேர்ந்து மத்திய அரசுக்கு நெருக்குதல் கொடுத்து வருகின்றன என்றும் அவர் குற்றம்சாட்டினுர்

தி மு க உறுப்பினர்களுக்கும் இந்திரா காங்கிரஸ்உறுப்பினர்களுக்குமிடையே மிகவும் காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றது.

பிரதமர் இவற்றுக்கு விளக்கம் அளிப்பார் என்று வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் தி மு.க இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலரும் சபையின் மையப்பகுதியில் திரண்டு ஒருவருக்கு ஒருவர் எதிராக கையைநீட்டி முழக்கமிட்டு குழப்பம்செய்தனர். இதனுல் தலேவர் சபையைக் கால்மணிநேரம் ஒத்தி வைத்தார்.

## பலதும் பத்தும்

### தூக்கமே காரணம்!!

நல்ல தூக்கம் ஒருவனுக்கு வருவது அவன் செய்த தவம். அவன்பெற்ற வரம்!

ஒருநாளேக்கு இரண்டு மணி நேரம்தான் தூங்குபவர் ஹிட்லர். அதுவே அவனுக்கு வெற்றியை மளமளவென்று தேடித் தந்தது ஒருநாள் நிம்மதியாக தூங்க நினேத்து இரண்டுதூக்கமாத்திரைகளே விழுங்கி தூங்கினுன், அன்றுதான் நோர்மண்டி முற்றுகை நடந்தது.

அமெரிக்காவும் பிரிட்டனும் ஆயிரக்கணக்கான கப்பல்களே பிரெஞ்சு நாட்டு நோர்மண்டி துறைமுகத்திற்கு அனுப்பி வெற்றிபெற்றன.

ஹிட்லரின் தோல்விக்கு அமெரிக்காவின் அணுக்குண்டு காரணமல்ல, ஹிட்லரின் தூக்கமே காரணம்!

'ஞானி'

# வடக்கே வந்த லொறிகள் வவுனியாவில் தடுத்து வைப்பு

(பூநகரி)

வடபகுதி நோக்கி கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிவந்த 250க்கும் மேற்பட்ட லொறிகள் தொடர்ந்தும் வவுனியா இராணுவ தடைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வடபகுதியிலிருந்து கொழும்பு நோக்கி பொருட்களை ஏற்றிச்சென்ற பல லொறிகள் கிளிநொச்சியில் தரித்துநிற்கின்றன.

பூநகரியிலும் பொருட்களை ஏற்றிய நிலையில் கொழும்பு செல்ல 10க்கும் மேற்பட்ட லொறிகள் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (23)

# சுயவிருப்ப ஓய்வு கால எல்லை நீடிப்பு

[கொழும்புத்துறை]

1990 இல் பொது நிர்வாக அமைச்சர் விடுத்த 44/90 இலக்கச் சுற்றுநிருபத்திற்கு இணங்கச் சுயவிருப்பத்தில் இளைப்பாறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான காலஅவகாசம் காலவரையின்றி நீடிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இவ்வாறு இளைப்பாறுபவர்களுக்கு மேலதிகமாக வழங்கத் தீர்மானித்திருந்த ஆறுமாத காலத்திற்கான மேலதிக போனஸ் பணம் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாகச் சில ஊழியர்கள் ஒய்வுபெற உத்தேசித்துள்ளதாகத் தெரியவருகிறது. [154]

## கொழும்பு சென்றவர்கள் இடைநடுவில் திரும்பினர்

(பூநகரி)

வடபகுதியிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற பலர் நொச்சிமோட்டையுடன் திரும்பிவந்துள்ளனர்.

வவுனியாவில் இராணுவத்தினர் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதை அடுத்தே பயணிகள் வவுனியா செல்லமுடியாது திரும்பிவந்துள்ளனர்.

இதேவேளை கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கிவந்த ஆயிரக்கணக்கான பயணிகள் வவுனியாவிற்கு அப்பால் தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (23)

### வவுனியா

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

இதன் அருகிலுள்ள கிறிஸ்தவ ஆலயம், வீடுகள், அரச திணைக்கள கட்டிடங்கள் பலத்த சேதமடைந்தன.

மீண்டும் 10-30மணியளவில் பஸ்டிப்போ சந்தியிலும் உருத்திரபுர பகுதியிலும் இரு தடவை குண்டுவீசித்தாக்கின. இதில் வீடுகளும், கட்டிடங்களும் சேதமுற்றதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இயக்கச்சியிலும் இடம்பெற்ற தாக்குதலில் கண்ணா என்ற 12 வயதுச் சிறுவனும் சதா என்ற 35 வயது மதிக்கத்தக்க ஒருவரும் படுகாயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இரணை இலுப்பைக்குளம், மதீனா நகரில் இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் பலியானார். இறம்பைக்குளம் வாசியான இ. கருணதாஸ் என்பவர் படுகாயமடைந்தார்.

நெடுங்கேணியில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட விமான தாக்குதலில் ஒருகடை முற்றாக சேதமடைந்தது. நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்தனர் சிவபாதம் [32 வயது], தவம்(27 வயது), கனகேந்திரம் (19 வயது), மயூரன் (18 வயது] ஆகியோரே படுகாயமடைந்தவராவர். (152-153-வி)

### புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் இதற்காக படையினர் குவிக்கப்பட்டு இராணுவத் தளபாடங்களும் தயார்படுத்தப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. (சி)

## வலைப்பாடு துறைமுகத்திற்கு உணவுக்கப்பல் வரும்

(யாழ்ப்பாணம்)

பூநகரி வலைப்பாடு துறைமுகத்திற்கு அடுத்த பத்து நாட்களுக்குள் உணவுப் பொருட்களுடன் கப்பல் பரீட்சாத்தமாக வரவிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு தேவையான உணவுப்பொருட்களும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களும் கப்பல்மூலம் மேற்படி துறைமுகத்தில் இறக்கப்படவிருக்கிறது.

கொழும்பிலுள்ள அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க செயற்குழுவின் அனுசரணையுடன் கப்பல் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார். (154)

## வீடு பார்க்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறையில் கடந்த வாரம் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற இரு சகோதரர்களில் ஒருவர் இன்னமும் வீடு திரும்பவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

திரு றெபேட், திரு யோசவ் ஆகிய இருவரும் கடந்த வாரம் யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்பட்டவேளையில் ஆஸ்பத்திரி பின்புறமுள்ள தமது வீடுகளைப் பார்க்கச்சென்றதாகவும் அதில் றெபேட் வீடு திரும்பியுள்ளாராம்.

யோசவ் நிலைபற்றி இது வரை எதுவும் தெரியவில்லை.

### வவுனியா வர

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் என்றும் நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து வடபகுதிக்கு வந்தவர்களிடம் இராணுவத்தினர் தெரிவித்தனராம். இதேவேளை கொழும்பிலிருந்து வடபகுதிக்கு வருவோர் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் படையினர் தெரிவித்தனராம். (சி)

### தமிழ் பொலிசார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [வி]

## வழமையான வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை நகரின் இடிபாடுகளை அகற்றி வருவதால் பெருந் தொகையான கடைகள் திறக்கப்பட்டு வழமையானவியாபாரம் நடைபெற்றுவருகிறது.

மரக்கறிச்சந்தையும் பழைய நிலைக்கு வந்துள்ளது. (எஸ்)

### 12,000 ஆஸ்திரிய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிராமத்தில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சின்னத்தம்பி கார்த்திகேசு, மணிகுமாரன் முருகேசு ஆகிய இரு விவசாயிகளினதும் நிலைபற்றி அறிய தாம் பலதடவைகள் முயற்சித்தபோதும் அரசு பதிலெதுவும் கூறவில்லையாம்.

இதையடுத்தே ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த 12,000 பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றை அண்மையில் இலங்கை அரசுக்கு அனுப்பிவைத்தும் அரசு பதிலெதுவும் கூறவில்லை.

இலங்கை அரசு மனித உரிமைகளை புறக்கணிக்கிறது என்பது இதிலிருந்து தெரியவருகிறது என்றும் காணமற்போன இருவரின் ஞாபகார்த்தமாக இரு மரங்கள் ஆஸ்திரியாவிலுள்ள 'வேர்கல்' நகரில் நடப்பட்டுள்ளதாகவும் இச்சபை தெரிவித்துள்ளது. [153]

### பலமான நிலையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த 10 நாட்களுள் புலிகள் தம்மை நன்கு தயார்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

# வளைகுடா யுத்தத்தை தவிர்க்க இறுதி முயற்சியில் 'கியூலர்'

[பக்தாத்]

வளைகுடாவில் பெரும் யுத்தம் ஒன்றை தவிர்க்கும் கடைசி முயற்சியில் ஐ. நா. செயலர் திரு. பெரஸ் டி கியூலர் ஈடுபட்டுள்ளார். நேற்று அவர் ஈராக் தலைநகர் போய்ச் சேர்ந்தார்.

இதேவேளை குவைத்திலிருந்து ஈராக்கிய படைகள் வெளியேறுவதற்கான காலக்கெடுவும் நெருங்கிவிட்டது. இலங்கை நேரப்படி செவ்வாய் காலை 10.30 மணியே காலக்கெடு முடிவு நேரமாகும்.

இதற்கிடையில் ஈராக்கிலிருந்து 12 மேற்குலக நாடுகளை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட ராஜதந்திரிகள் நேற்று வெளியேறினர். உலக நாடுகளின் கவனம் முழுவதும் தற்போது வளைகுடா பக்கம் திரும்பியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### தனியார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி உத்தரவை நேற்று பாதுகாப்பு அமைச்சு விடுத்தது. மேலும் கப்பல்களில் திருத்தவேலை ஏதும் ஏற்படும் பட்சத்திலும் கடற்படையினருடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### பெப்ரவரி மாதத்தி

(1ம் பக்க தொடர்ச்சி]

இத்திருத்த வேலைகளுக்கு ஐம்பதுலட்சம் ரூபா செலவாகுமென மின்சார சபை மதிப்பிட்டுள்ளது.

இவ்வேலைகளைத் தடங்கலில்லாதவிடத்து நிர்வாக அலுவலர் உடன் ஐந்து அதிகாரிகளும், முப்பது தொழிலாளர்களும் ஒருமாத காலத்தில் செய்து முடிக்கவிருப்பதாக வடபிரதேச மின்சார சபை அறிவித்துள்ளது.

திருத்தவேலைகள் பூர்த்தியானதும் கிளிநொச்சி பிரதான உப மின்நிலயத்திற்கும் 132 கே. வி. மின்சாரம் கிடைக்கும். அங்கிருந்து சுன்னாகம் பிரதான மின் நிலயத்திற்கு 33 கே. வி. மின்மார்க்க மூலம் 5 மெகவாட் மின்சாரம் மட்டும் கிடைக்கும்.

மின்மாற்றிகளுக்கான எண்ணெயையும் கொழும்பிலிருந்து பெறச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. [எஸ்]

## காவலூரில் ராணுவம் பலி இரு படையினர் காலிழப்பு

(வேலணை)

ஊர்காவற்றுறைப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைப்பக்கமாக வர எத்தனித்தவேளை அங்கு வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்குண்டு ஒருவர் பலியானார்.

மற்றும் இரு படையினர் கால்களை இழந்த நிலையில் முகாம்நோக்கி திரும்பினர். ஏற்கனவே இப்பகுதியில்புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளிலேயே இவர்கள் சிக்குண்டனர்.

### சிறுமி பலி

(புங்குடுதீவு)

குளத்தில் குளிக்கச் சென்ற சிறுமி ஒருத்தி குளத்தில் தவறி வீழ்ந்து மரணமானாள்.

இச்சம்பவம் கடந்த 10-ம் திகதி புங்குடுதீவு கொக்களிக் குளத்தில் நிகழ்ந்துள்ளது.

புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தசாமி கஜந்தினி (வயது-06) என்ற சிறுமியே இவ்வாறு பலியானவராவார். (101)

## பெண்போராளி வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்றுப் பிற்பகல் 5.45 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து விடுதலைப்புலிகளின் காவலரண்கள்மீது நடத்திய தாக்குதலில் மதனி [பிறேமினி மட்டக்களப்பு] வீரமரணமடைந்தார்.

பெண் போராளியான இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (வி)

### இந்திய அமைச்சர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களையும் அவர்கள் பிரதமர் திரு. சந்திரசேகரிடம் சமர்ப்பித்துள்ளனர் எனினும் இவர்களது ராஜிநாமாவைப் பிரதமர் ஏற்கவில்லை.

வெளியுறவு அமைச்சர் திரு. வி. ஸி. சுக்லா, சுகாதார அமைச்சர் திரு. ஷகிலூர் ரகுமான், மற்றும்அமைச்சர் திரு. பாகிகோவர்த்தன், திரு. ஸர்வார் குசேன், திரு. பாசவராஜ் பட்டேல், ராஜிராஜினாமா செய்துள்ளார்..

### இந்தியா விட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

வரையற்ற போர் நிறுத்தத்தையும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையையும் சிறிலங்கா அரசு நிராகரித்துள்ளது.

ஆயுதங்களைக் கீழே போட்டுச் சரணாகதி அடையக்கோரும் அநீதியான நிபந்தனைகளை முன்வைத்து யுத்தத்தைத் தொடர்வதற்குச் சிங்கள அரசு முடிவுசெய்திருக்கிறது. சமாதான வழிமூலம் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் சிறிலங்கா அரசுக்கு எவ்விதமான அக்கறையும் இல்லையென்பதை இந்த முடிவானது உலக சமுதாயத்திற்குத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது,

இனவாத அரசியலிலிருந்தும் இராணுவ அடக்குமுறைப் பாதையிலிருந்தும் சிங்கள ஆளும் வர்க்கம் ஒருபொழுதும் விட்டுவிலகப்போவதில்லை என்பதையும் இந்த முடிவு உலகுக்கு நன்குஉணர்த்தியிருக்கிறது.

போர் என்ற போர்வையில் சிறிலங்கா அரசு தமிழ் ஈழமக்களுக்கு எதிராக என்றுமில்லாதவாறு ஒரு கொடூரமான இனப் படுகொலையை நடத்தி வந்தது. ஏழு மாதங்களவரை நடைபெற்ற இந்த யுத்தத்தில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரம்பேர் காயமடைந்தனர். பத்து லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாயினர்.

தமிழ் ஈழத்தில் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட்டு, எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதற்காகவே நாம் போராடுகிறோம், எம்மை அழித்துவிடும் நோக்குடன் சிங்கள அரசு யுத்தத்தை தொடர முடிவு எடுத்துள்ளது, எனவே இந்த யுத்தத்தால் ஏற்படக்கூடிய சகல விதமான விளைவுகளுக்கும் சிறிலங்கா அரசுதான் பொறுப்பேற்கவேண்டும்.

இந்திய அரசும் இது போன்ற நிபந்தனையை விதித்ததால் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் ஒரு நீண்ட யுத்தம் மூண்டது என்பதும் இறுதியில் எம்மிடம் ஆயுதங்களை களையமுடியாத நிலையில் இந்திய இராணுவம் வெளியேறியது என்பதும் சிறிலங்கா அரசிற்கு நன்கு தெரிந்த விடயம் இந்திய அரசு செய்த பாபெரும் வரலாற்றுத் தவறையே சிறிலங்கா அரசும் செய்யப் போகின்றது என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். (வி)